# 12. லைவ்வயர் தகவல் அமைப்பு

வணிகத் துறையின் துணைப் பொதுமேலாளர் (டிஜிஎம்) கணினி அடிப்படையிலான மேலாண்மைத் தகவல் அமைப்பை (MIS) உருவாக்கும் பணியை டாக்டர் அஷ்வனி குமாரிடம் ஒப்படைத்தார். அவர் பணியாற்றிய துறை இதுவரை கையேட்டு முறையைப் பின்பற்றி வந்தது. படிப்பு விடுப்பு முடிந்து சமீபத்தில் மீண்டும் துறையில் சேர்ந்திருந்தார் டாக்டர் குமார். டாக்டர் குமாரைச் சந்தித்த ஒர் இளம் சகஊழியர் கண்சிமிட்டி, “இங்கே பயனுள்ள கணினி அடிப்படையிலான தகவல் அமைப்பை உங்களால் வடிவமைக்க முடியாது” எனத் தமது வழக்கமான நகைச்சுவை பாணியில் கூறினார். டாக்டர் குமாரால் அவருடைய நகைச்சுவையை அந்தச் சூழ்நிலையில் புரிந்து கொள்ள முடியவில்லை. பின்னர் வந்த நாள்களில் அவர் அனுபவித்த விஷயங்களால் அதனைப் புரிந்து கொண்டார்.

அவர் வேலை செய்த நிறுவனம் சமீபத்தில் மற்றொரு நிறுவனத்தை வாங்கி இருந்தது, இது அனைத்துப் பரிவர்த்தனைகள், செயல்திறன் தரவு போன்றவற்றை ஒவ்வொரு நிலையிலும் செயல்பாட்டிலும் பதிவு செய்யும் மிகவும் முறையான அமைப்பைக் கொண்டிருந்தது. அவர்கள் கையகப்படுத்திய நிறுவனம் ஒர் இங்கிலாந்து நிறுவனத்துடன் கூட்டுத் தயாரிப்பில் இருந்ததால் விரிவான ஆவணங்கள் அந்த நிறுவனத்தின் நடைமுறையில் இருந்தன. தாய் நிறுவனம் ரஷ்ய ஒத்துழைப்பைக் கொண்டிருந்தது. மேலும், மொழிச் சிக்கல்கள் காரணமாக முறையான அமைப்பின் ஆவணங்கள் கணினிக்கு மாற்றப்படவில்லை. .

திரு. யோகேஷ் கையகப்படுத்தப்பட்ட நிறுவனத்தின் இந்தூர் ஆலையில் இருந்து மூத்த வணிகப்பொறியாளராக இந்த ஆலைக்கு மாற்றப்பட்டார். அவர் மோட்டார் விற்பனைப் பிரிவில் வணிகப் பொறியாளர் மற்றும் DGM இன் நம்பகமான உதவியாளரான திரு.ரஸ்தோகிக்குப் பதிலாக நியமிக்கப் பட்டார். ஒருநாள் DGM திரு. யோகேஷை அழைத்துக் கேட்டார்:

*டிஜிஎம்:* “திரு.யோகேஷ், கடந்த, மாதத்தில் நமது ஆலையில் மோட்டார் உற்பத்தி எவ்வளவு?’

*திரு.யோகேஷ்:* "சார், நான் கோப்புகளைச் சரிபார்த்து உங்களுக்குத் தெரிவிக்கிறேன்."

*டிஜிஎம்:* "என்ன இது? உங்களுக்குத் தெரியாதா? என்னால் பொறுத்துக் கொள்ள முடியாது. எனக்கு லைவ்வைர் தகவல் அமைப்பு”வேண்டும். திரு.ரஸ்தோகியை அழையுங்கள்”.

திரு. ரஸ்தோகி வந்துவிட்டார்.

*DGM :”* திரு.ரஸ்தோகி கடந்த மாதத்தில் நமது ஆலையில் மோட்டார் உற்பத்தி எவ்வளவு ?”

*திரு.ரஸ்தோகி:* ( தமது டைரியின் பக்கங்களைப் புரட்டி), "சார்! இருபத்தி நான்கு மோட்டார்கள்."

*DGM:* கவனியுங்கள் திரு யோகேஷ்! எனக்குத் திரு. ரஸ்தோகி போன்ற திறமையான லைவ்வைர் எக்சிகியூட்டிவ் வேண்டும்.

திரு. ரஸ்தோகியின் பக்கத்தில் அமர்ந்து, டாக்டர் குமார் கவனித்தார், திரு. ரஸ்தோகி குறிப்பிட்ட பக்கம் வெற்றுப்பக்கமாக இருந்தது. திரு. ரஸ்தோகி இப்போது மோட்டார்கள் விற்பனையைக் கூடக் கையாளாததபோது, எப்படி தகவல் கிடைத்தது? என்று சிந்தித்தார்.

டாக்டர் குமார் கணினி அடிப்படையிலான MIS வடிவமைப்பில் தமது முயற்சிகளைத் தொடர்ந்தார். தொழில்துறை வாடிக்கையாளர்களுக்கு வெப்ப மற்றும் நீர் மின்நிலையங்கள், மோட்டார்கள், கட்டுப்பாடு மற்றும் பல்வேறு உபகரணங்களை நிறுவனம் வழங்கியது. சில ஆயிரங்கள் முதல் சில மில்லியன் ரூபாய்கள் வரை, கூறுகள் அளவிலும் கூட்டங்கள் அளவிலும் மதிப்பிலும் வேறுபடுகின்றன. ஆண்டு தோறும் வழங்கப்பட்ட அவர்களின் எண்ணிக்கை ஆயிரக்கணக்கானதாக இருந்தது. டாக்டர் குமார் கணினி நிரல்களை வடிவமைத்து, உற்பத்தித் துறைகளிடமிருந்து தரவுகளைச் சேகரித்து, ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு மாதத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களின் பணமதிப்பைப் பெறுவதற்கு விகிதங்களைக் கொண்டு பெருக்கி, அவற்றைக் கணக்கு வாரியாகத் தொகுத்து, ஒட்டுமொத்த உற்பத்திக்கான சூத்திரத்தைப் பொருத்தி, வைத்தார். பட்ஜெட்புள்ளி விவரங்கள், மாறுபாடுகளுடன் கணக்கிட்டு இறுதித் தயாரிப்பு அறிக்கை வருவதற்கான வழிவகை செய்தார்.

சோதனை ஓட்டத்தை நடத்துவதற்கு, முந்தைய மாதத்திற்கான பல்வேறு கூறுகள் மற்றும் அசெம்பிளிகளின் உற்பத்திப் புள்ளி விவரங்களைக் கொடுக்கும்படி அவர் ஒரு பட்டறையின் ஃபோர்மேனிடம் கேட்டார். ஃபோர்மேன், “எதுசார்?” என்று கேட்டார். டாக்டர் குமார் சற்று ஆச்சரியப்பட்டு, “ஒன்றுக்கு மேற்பட்ட புள்ளி விவரங்கள் உள்ளனவா?” என்று கேட்டார். போர்மேன் பதிலளித்தார்.

“ஆமாம் ஐயா, உங்களுக்கு உண்மை வேண்டுமா அல்லது நாங்கள் ஒவ்வொரு மாதமும் என்ன அறிவிக்கிறோம் என்பது வேண்டுமா என்றார்? ஒவ்வொரு மாதமும் நாங்கள் மாதத்தின் உற்பத்தியை அறிவிக்கிறோம். இது உண்மையான ஒன்றல்ல.” டாக்டர். குமார் அதிர்ச்சியடைந்து, "எனக்கு உண்மையான புள்ளி விவரங்களைக் கொடுங்கள்" என்று கேட்டார். தகவல் கிடைத்ததும் இறுதி அறிக்கையை முடித்துப் பிரிண்ட் அவுட்டை டிஜிஎம்-மிடம் கொடுத்தார்.

டிஜிஎம் அறிக்கையைப் பார்த்ததும் மிகவும் கோபமடைந்து டாக்டர் குமாரிடம் கூறினார்:

"என்ன? இது கடந்த மாதம் பட்ஜெட்டில் 70% மட்டுமே நாம் உற்பத்தி செய்திருக்கிறோம் என்று சொல்கிறீர்களா? இதனைச் செயல் இயக்குநரிடம் கொண்டு செல்ல முடியாது. அவர் என்னை மிகவும் கடிந்து கொள்வார். குறைந்த பட்சம் மொத்த உற்பத்தியை 90% ஆக்க ஏதாவது செய்யுங்கள்”.

DGM-இன் பதிலில் டாக்டர் குமார் குழப்பமடைந்தார். ஆயிரக்கணக்கான உதிரிப்பாகங்களும் அசெம்பிளிகளும் இருப்பதால், அவர் கேட்ட தகவல்களை எப்படி கொடுப்பது என்று யோசித்தார். மொத்த உற்பத்தியை பட்ஜெட் சமயத்தில் அறிவிப்பது கையேட்டு முறையில் செயல்படுவதாக இருக்கலாம், ஆனால் கணினி மயமாக்கப்பட்ட அமைப்பில் அதனை எவ்வாறு கையாள்வது என்பது அவரது புரிதலுக்கு அப்பாற்பட்டது.

இந்தச் சூழ்நிலையில் கையகப்படுத்தப்பட்ட நிறுவனத்தில் இருந்து ஒரு புதிய பொதுமேலாளர் ஆலையின் ஆட்சிப் பொறுப்பேற்ற போது அவர் தமது முதல் உரையில் நிர்வாகியிடம் இப்படிக் கூறினார், "ஆச்சரியப்படுவதற்கில்லை, உண்மையான உற்பத்தி

மற்றும் அறிவிக்கப்பட்டவற்றுக்கு இடையிலான பற்றாக்குறையை ஈடு செய்ய வேண்டுமானால், ஒரு வருடம் முழுவதையும் உற்பத்தி விடுமுறையாக அறிவிக்க வேண்டும், நீங்கள் உற்பத்தியை மிகைப்படுத்தி அறிவித்திருக்கிறீர்கள்” என்று கூறினார்.